# அனுமதிப்பு விசாரணைகள் பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன?

**அக்டோபர் 2024**

## அனுமதிப்பு விசாரணைகள் பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன?

கனடாவில் இருக்க உங்களுக்கு உரிமை இல்லை என்பதற்கு காரணம் ஒன்று உள்ளது என்று கனடா எல்லை சேவைகள் முகமை (CBSA) நம்பினால், அனுமதிப்பு விசாரணைக்கு ஆஜராகுமாறு உங்களுக்கு உத்தரவிடப்படலாம். கனடாவின் குடிவரவு மற்றும் அகதிகள் வாரியத்தின் (IRB) குடிவரவு பிரிவு (ID) மூலம் அனுமதிப்பு விசாரணைகள் நடத்தப்படுகின்றன. கீழ்க்கண்ட தகவல்கள், அனுமதிப்பு விசாரணைச் செயல்முறை குறித்தும் மற்றும் அதில் நீங்கள் என்ன எதிர்பார்க்கக்கூடும் என்பது குறித்தும் நீங்கள் புரிந்துகொள்ள உதவும்.

## அனுமதிப்பு விசாரணைகளில் IRB இன் பங்கு

IRB ஆனது CBSA சார்பற்றதாகும் . நீங்கள் அனுமதிக்க முடியாதவரா என்பதைக் குடிவரவு பிரிவின் உறுப்பினர் தீர்மானிப்பார். நீங்கள் அனுமதிக்கப்படாவிட்டால், கனடாவை விட்டு வெளியேறும்படி உங்களுக்கு உத்தரவிடப்படும். நீங்கள் வேறொரு நாட்டில் இருந்தால், நீங்கள் கனடாவிற்குள் நுழைய அனுமதிக்கப்பட மாட்டீர்கள். இருப்பினும், நீங்கள் இங்கேயே தங்குவதற்கு அல்லது இங்கு உள்நுழைவதற்கு உங்களை அனுமதிக்கக்கூடும் விருப்பத்தேர்வுகள் உங்களுக்கு இருக்கக்கூடும்.

> **நீங்கள் பின்வருவனவற்றைத் தெரிந்து கொள்ள வேண்டும்:** உங்களுடைய அனுமதிப்பு விசாரணைக்குப் பொறுப்பு வகிக்கும் நபர் **குடிவரவுப் பிரிவின் உறுப்பினர் ஆவார்**, அவர் **உறுப்பினர்** எனவும் அழைக்கப்படுவார்.

> **நீங்கள் பின்வருவனவற்றைத் தெரிந்து கொள்ள வேண்டும்**: உங்களுடைய அனுமதிப்பு விசாரணையைத் தொடர்ந்து, CBSA இன் முடிவு சரியானதாக இருப்பதால் உங்களைக் கனடாவிற்குள் அனுமதிக்க இயலாது அல்லது CBSA இன் முடிவு சரியானதல்ல என்பதால் நீங்கள் கனடாவிற்குள் அனுமதிக்கப்பட இயலாதவர் அல்ல என்றவாறு உறுப்பினரின் முடிவு இருக்கும்.

## அனுமதிப்பு விசாரணைக்கு ஆஜராகும் படி உங்களுக்கு உத்தரவிடப்பட்ட பிறகு என்ன நடக்கும்

விசாரணைக்கு முன், உங்களை ஏன் அனுமதிக்கக் கூடாது என CBSA நம்புகிறது என்பதைக் கோடிட்டுக் காட்டும் ஆவணங்களின் தொகுப்பை CBSA உங்களுக்கு அனுப்பும். இந்தத் தொகுப்பில், உங்கள் விசாரணையின் போது ID பிரிவு பரிசீலனையில் எடுத்துக்கொள்ள விரும்பும் ஆவணங்கள் உள்ளடங்கியிருக்கும்.

நீங்கள் குடிவரவுப் பிரிவிலிருந்து உங்கள் அனுமதிப்பு விசாரணையின் தேதி மற்றும் நேரம் பற்றிய விவரங்களுடன் கூடிய அறிவிப்பைப் பெறுவீர்கள். இது உங்களுடைய **விசாரணைக்கு ஆஜராகுவதற்கான அறிவிப்பு**. இந்த அறிவிப்பை கவனமாகப் படியுங்கள்.

## உங்களுடைய அனுமதிப்பு விசாரணையை மேற்கொள்வதற்கு வெவ்வேறு வழிகள் உள்ளன

### மெய்நிகர்

அனைத்து IRB விசாரணைகளும் மெய்நிகர் விசாரணைகளாக நடத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளன. பொருத்தமான அறைக்கான அணுகல் மற்றும் சரியான தொழில்நுட்பத்திற்கான அணுகல் ஆகியவை உங்களுக்கு இல்லாமல் இருந்தாலோ , அல்லது மெய்நிகர் முறையில் பங்கேற்பதில் உங்களுக்கு பிரச்சனைகள் இருந்தாலோ, ஒரு IRB கணினியைப் பயன்படுத்தி IRB அலுவலகத்துடன் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.

உங்களுடைய மெய்நிகர் விசாரணைக்கு உங்களைத் தயார் செய்ய உங்களுக்கு உதவிடும் பொருட்டு நாங்கள் தயார் செய்துள்ள விரைவு உதவிக்குறிப்புகளைப் பார்க்கவும்: https://wr-edc-prd.edc-prd.irbnet.gc.ca/en/ information-sheets/Pages/quick-tips-virtual-hearings.aspx.

### நேரடியாக

நீங்கள் ஒரு நேரடி விசாரணைக்கும் கோரிக்கை அளிக்கலாம். பின்வரும் இணையதளத்தில் குடிவரவுப் பிரிவின் மெய்நிகர் மற்றும் நேரிடையான விசாரணைகளைத் திட்டமிடுவது குறித்த IRB இன் நடைமுறை அறிவிப்பில் கோரிக்கைகளை வைப்பதற்கான வழிமுறைகளை நீங்கள் காணலாம்: https://wr-edc-prd.edc-prd.irbnet.gc.ca/en/legal-policy/ procedures/Pages/practice-notice-scheduling-virtual-in-person- hearings.aspx#s13.

**நீங்கள் காவலில் வைக்கப்பட்டிருந்து** நேரடி விசாரணையை நீங்கள் விரும்பும்பட்சத்தில், அது குறித்து நீங்கள் உங்கள் வழக்கறிஞரிடமோ (உங்களுக்கான பிரதிநிதித்துவம் இருந்தால்) அல்லது நீங்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள இடத்துக்குப் பொறுப்பு வகிக்கும் அதிகாரியிடமோ (உங்களுக்கான பிரதிநிதித்துவம் இல்லாமல் இருந்தால்) கேட்கலாம்.

## அனுமதிப்பு விசாரணைக்குத் தயார் செய்தல்

### விளக்கம்

விசாரணையின் போது உங்கள் சொந்த மொழியில் ஒரு மொழிபெயர்ப்பாளரை நீங்கள் வைத்திருக்க விரும்பினால், அதை உடனடியாக ID பிரிவிற்குத் தெரிவிக்கவும். உங்கள் விசாரணையில் உங்களுக்காக மொழிபெயர்க்க ஒரு மொழிபெயர்ப்பாளரை நாங்கள் வழங்க முடியும். விசாரணைக்கு ஆஜராகும்படி உங்களுக்கு அளிக்கப்படும் அறிவிப்பில் தொடர்புக்கானத் தகவல் மற்றும் மொழிபெயர்ப்பாளர்களுக்கான முக்கிய அறிவுரைகள் ஆகியவை உள்ளடங்கியுள்ளன.

### அனுமதிப்பு விசாரணையில் பிரதிநிதித்துவம்

உங்கள் விசாரணையில் உங்களைப் பிரதிநிதித்துவப்படுத்த முடியும் என்றாலும், உங்களுக்கு உதவ ஆலோசகரை நீங்கள் நியமிக்க விரும்பலாம். வழக்கறிஞர்கள், பதிவு செய்யப்பட்ட குடிவரவு ஆலோசகர்கள் அல்லது கியூபெக் நோட்டரிகள் போன்ற குறிப்பிட்ட நபர்கள் மட்டுமே ஆலோசகராக செயல்படுவதற்கான கட்டணத்தைப் பெற முடியும். உங்கள் ஆலோசனைக்கு பணம் செலுத்துவதற்கு நீங்களே பொறுப்பாவீர்கள்.

ஆலோசனைக்குப் பணம் செலுத்த உங்களிடம் போதுமான பணம் இல்லை என்றால், நீங்கள் இலவச சட்ட உதவியைப் பெற இயலும். சில மாகாணங்கள் மற்றும் பிரதேசங்கள் தகுதியுள்ள நபர்களுக்கு இலவச சட்ட உதவியை வழங்குகின்றன.

பிரிட்டிஷ் கொலம்பியா, ஆல்பர்ட்டா, மேனிடோபா, ஒன்டாரியோ, கியூபெக் மற்றும் நியூஃபவுண்ட்லாந்து மற்றும் லாப்ரடார் ஆகியவற்றில் உள்ள சட்ட உதவி அலுவலகங்களைத் தொடர்பு கொள்வதற்கானத் தகவலை பின்வரும் இணையதளத்தில் பார்க்கவும்: https://wr-edc-prd.edc-prd.irbnet.gc.ca/en/legal- policy/legal-concepts/Pages/legal-aid-office.aspx.

ஒரு நண்பரோ, குடும்ப உறுப்பினரோ அல்லது சமூக ஆதரவை அளிக்கும் நபரோ அவர் செய்யும் உதவிக்குப் பணம் பெறவில்லை என்றால், அவரும் உங்கள் ஆலோசகராக செயல்படலாம். நீங்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தால், சட்ட உதவியைப் பெறவோ அல்லது பிற ஆலோசகரைத் தொடர்புகொள்ளவோ, நீங்கள் எங்கு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளீர்களோ அங்குள்ள அதிகாரியிடம் கேளுங்கள்.

நீங்கள் ஒரு ஆலோசகரை நியமிக்க முடிவு செய்தாலோ அல்லது வேறு யாரேனும் ஒருவரை உங்களுக்கு உதவிடும் பொருட்டு நியமிக்க முடிவு செய்தாலோ அதை நீங்கள் முடிந்தவரை சீக்கிரமாகச் செய்ய வேண்டும். ஆலோசகரைக் கண்டுபிடிக்க அதிக நேரத்தை நீங்கள் குடிவரவு பிரிவிடம் கேட்கலாம், ஆனால் நீங்கள் உங்கள் பிரதிநிதித்துவத்தை முன்கூட்டியே திட்டமிடவில்லை என்றால், நீங்கள் ஆலோசகர் இல்லாமல் தொடர வேண்டும் என்று ID முடிவு செய்யக்கூடும். விசாரணைக்கு ஆஜராகும் படி உங்களுக்கு அளிக்கப்பட்ட அறிவிப்பில் தொடர்பு கொள்வதற்கான தகவல் மற்றும் ஆலோசகர் குறித்த முக்கியமான அறிவுரைகள் உள்ளடங்கியுள்ளன.

### ஆதாரம்

உங்கள் அனுமதிப்பு விசாரணையில் ஆதாரத்தை அளிக்கும்படி உங்களிடம் கேட்டுக்கொள்ளப்படலாம். ஆதாரங்கள் என்பது விசாரணையின் போது நீங்கள் அளிக்கும் ஆவணங்களாகவோ அல்லது நீங்கள் அல்லது பிற சாட்சிகள் அளிக்கும் வாய் மொழிச் சான்றாகவோ இருக்கலாம்.

ஆவணங்களின் நகல்கள் உங்கள் விசாரணைக்கு குறைந்தபட்சம் **5 நாட்களுக்கு** முன்பாக CBSA மற்றும் குடிவரவு பிரிவிற்கு வழங்கப்பட வேண்டும் மற்றும் மற்றும் அவை ஆங்கிலம் அல்லது பிரெஞ்சு மொழியில் இருக்க வேண்டும். உங்களுடைய அனுமதிப்பு விசாரணையின் போது CBSA பயன்படுத்த விரும்பும் ஆதாரங்களின் ஒரு நகலை விசாரணைக்கு குறைந்தது **5 நாட்களுக்கு** முன்பாக உங்களுக்கு அனுப்ப வேண்டும்.

ஆவணங்களை எவ்வாறு தயாரித்து வழங்க வேண்டும் என்பது குறித்து மேலும் அறிந்து கொள்ள குடிவரவுப் பிரிவின் விதிகளைப் பார்க்கவும்: https://laws-lois.justice.gc.ca/eng/regulations/SOR- 2002-229/page-2.html#h-691479.

### சாட்சிகள்

உங்களுடைய அனுமதிப்பு விசாரணையில் பேச சாட்சிகளை நீங்கள் அழைக்கலாம். எந்த ஒரு சாட்சி குறித்தும் விசாரணைக்கு குறைந்தபட்சம் **5 நாட்களுக்கு** முன்பாக, நீங்கள் குடிவரவுப் பிரிவு மற்றும் CBSA ஆகிய இரண்டிற்கும் தகவல் தெரிக்க வேண்டும். விசாரணைக்கு ஆஜராகும் படி உங்களுக்கு அளிக்கப்பட்ட அறிவிப்பில் தொடர்பு கொள்வதற்கான தகவல் மற்றும் ஆலோசகர் குறித்த முக்கியமான அறிவுரைகள் உள்ளடங்கியுள்ளன.

சாட்சிகளுக்கான விதிகளைப் பற்றி மேலும் அறிந்து கொள்ள குடிவரவுப் பிரிவின் விதிகளைப் பார்க்கவும்: https://laws-lois.justice.gc.ca/eng/regulations/SOR-2002-229/ page-2.html#h-691526.

### முன் விசாரணைக் கலந்தாய்வு

கூடுதல் தகவல்களைப் பெறவும் உங்கள் வழக்கைப் பற்றி விவாதிக்கவும் குடிவரவுப் பிரிவு முன் விசாரணைக் கலந்தாய்வை நடத்த திட்டமிடலாம். விசாரணைக்கு ஆஜராகுவதற்கான உங்களுடைய அறிவிப்பு முன் விசாரணைக் கருத்தாய்வு நடைபெறும் தேதி மற்றும் நேரம் குறித்த தகவல்களை அளிக்கும்.

## ஓர் அனுமதிப்பு விசாரணையின் போது என்ன நடக்கும்

1. குடிவரவுப் பிரிவு உறுப்பினர் விசாரணைக்குப் பொறுப்பு வகிப்பார். உறுப்பினர் அனைவரையும் அறிமுகப்படுத்தி என்ன நடக்கப் போகிறது என்பதை விளக்கி விசாரணையைத் தொடங்குவார். நீங்கள் ஒரு மொழிபெயர்ப்பாளரைக் கேட்டிருந்தால், நீங்களும் மொழிபெயர்ப்பாளரும் ஒருவரையொருவர் புரிந்துகொள்கிறீர்களா என்பதை உறுப்பினர் சரிபார்ப்பார்.
2. அறிமுகங்களுக்குப் பிறகு, ஒவ்வொரு பக்கமும் தங்களுக்கு வழங்கப்படும் வாய்ப்பின் போது உறுப்பினரிடம் தங்கள் வழக்கை எடுத்துரைப்பார்கள். நீங்கள் சாட்சியாக அழைக்கப்பட்டு உங்களிடம் கேள்விகள் கேட்கப்படலாம். CBSA பிரதிநிதி, உங்கள் சொந்த ஆலோசகர் மற்றும் உறுப்பினர் என அனைவரும் உங்களிடம் கேள்விகளைக் கேட்கலாம்.

3. உங்களைக் கனடாவில் அனுமதிக்க இயலாது என்று CBSA ஏன் நம்புகிறது என்பதை CBSA பிரதிநிதி ஒருவர் உறுப்பினருக்கு விளக்குவார்.
4. நீங்கள் அல்லது உங்கள் ஆலோசகர் பதிலளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுவீர்கள். CBSA இன் நிலைப்பாட்டை நீங்கள் ஏற்கவில்லை என்றால், அதற்கான காரணத்தை நீங்கள் அல்லது உங்கள் ஆலோசகர் விளக்கலாம்.
5. பின்னர் நீங்கள் அல்லது உங்கள் ஆலோசகர் கூறியதற்குப் பதிலளிக்க CBSA அனுமதிக்கப்படும்.
6. தகவல்களை வழங்க சாட்சிகள் இருந்தால், அவர்களிடம் CBSA பிரதிநிதியோ, நீங்களோ, உங்கள் வழக்கறிஞரோ அல்லது உறுப்பினரோ கேள்விகள் கேட்கலாம்.

## நீங்கள் ஒரு முடிவைப் பெறும்போது

இரு தரப்பு கருத்துக்களையும் கேட்ட பிறகு, உறுப்பினர் தனது முடிவை எடுப்பார். உறுப்பினரின் முடிவு பின்வருமாறு இருக்கும்:

1. CBSA இன் முடிவு சரியானது எனவே உங்களைக் கனடாவிற்குள் அனுமதிக்க இயலாது **அல்லது**
2. CBSA இன் முடிவு சரியானதல்ல எனவே நீங்கள் கனடாவிற்குள் அனுமதிக்கப்பட இயலாதவர் அல்ல

உறுப்பினர் பொதுவாக விசாரணையின் முடிவில் தங்களுடைய முடிவையும், காரணங்களையும் தெரிவிப்பார். இல்லையெனில், விசாரணைக்குப் பிறகு, IRB முடிவின் நகலையும், காரணங்களையும் மின்னஞ்சல் மூலம் அல்லது அஞ்சல் மூலம் உங்களுக்கு அனுப்பும்.

## உங்களை அனுமதிக்க முடியாது என்று உறுப்பினர் தீர்மானித்தால் என்ன நடக்கும்

நீங்கள் அனுமதிக்கப்பட இயலாதவர் அல்ல என்று உறுப்பினர் முடிவு செய்தால், நீங்கள் ஒரு சாதகமான முடிவைப் பெறுவீர்கள். நீங்கள் கனடாவிற்குள் நுழைய அனுமதிக்கப்படலாம் அல்லது குறிப்பிட்ட காலம் இங்கு தங்கலாம். நீங்கள் ஒரு சாதகமான முடிவைப் பெற்றால், அடுத்த படிகள் பற்றிய தகவலுக்கு நீங்கள் CBSA ஐத் தொடர்பு கொள்ள வேண்டும். CBSA இந்த முடிவை IRB இன் தனிப் பிரிவான குடிவரவு மேல்முறையீட்டு பிரிவில் (IAD) மேல்முறையீடு செய்யலாம். CBSA இதைச் செய்தால், அது உங்களுக்குத் தெரிவிக்கப்படும், மேலும் நீங்கள் IAD விசாரணையில் பங்கேற்க முடியும்.

## உங்களை அனுமதிக்க முடியாது என்று உறுப்பினர் முடிவு செய்தால் என்ன நடக்கும்

உங்களை அனுமதிக்க முடியாது என்று உறுப்பினர் முடிவு செய்தால், உங்களை அகற்றுவதற்கான ஆணையை நீங்கள் பெறுவீர்கள். 3 வகையான அகற்றுதல் உள்ளன:

- புறப்படும் உத்தரவுகள்
- விலக்கு உத்தரவுகள்
- நாடு கடத்தல் உத்தரவு

நீங்கள் எந்த வகையான அகற்றுதல் ஆணையைப் பெறுகிறீர்கள் என்பது உங்களை ஏன் அனுமதிக்க முடியாது என்பதைப் பொறுத்து அமையும்.

பல்வேறு வகையான அகற்றுதல் ஆணைகளைப் பற்றி மேலும் அறிய கனடாவிலிருந்து அகற்றப்படுதல் மற்றும் அகற்றுதல் ஆணைகளைப் பார்க்கவும்: <https://www.cbsa-asfc.gc.ca/security-securite/rem-ren-eng.html.

நீங்கள் கனடாவை விட்டு வெளியேற வேண்டும் என்று ஓர் அகற்றுதல் ஆணை கூறுகிறது, ஆனால் உங்களைத் தங்குவதற்கு அனுமதிக்கும் பிற விருப்பத்தேர்வுகளும் உங்களுக்கு இருக்கக்கூடும். IAD -க்கு மேல்முறையீடு செய்ய உங்களுக்கு உரிமை இருக்கலாம் அல்லது ID யின் முடிவை எதிர்த்து பெடரல் கோர்ட்டில் விண்ணப்பம் செய்யலாம். இதை எப்படிச் செய்வது என்பது பற்றிய சட்ட ஆலோசனையைப் பெற நீங்கள் விரும்பலாம், மேலும் நீங்கள் ஏதேனும் ஒரு விண்ணப்பத்தை விரைவாகத் தாக்கல் செய்ய வேண்டும்.

## முக்கிய அறிவிப்பு

இந்தக் கையேடு, அனுமதிப்பு தொடர்பான விசாரணை செயல்முறை பற்றிய பொதுவான தகவல்களை வழங்குகிறது. இது சட்ட ஆலோசனையாக கருதப்படவோ அல்லது வழங்கப்படவோ இல்லை. அனுமதிப்பு விசாரணை செயல்முறை பற்றிய கூடுதல் தகவலுக்கு, தயவுசெய்து குடிவரவு மற்றும் அகதிகள் பாதுகாப்புச் சட்டத்தைப் பார்க்கவும்: https:// laws-lois.justice.gc.ca/eng/acts/I-2.5/index.html,குடிவரவு மற்றும் அகதிகள் பாதுகாப்பு விதிமுறைகள்: https://laws.justice.gc.ca/ eng/regulations/SOR-2002-227/index.html மற்றும் குடிவரவு பிரிவு விதிகள்: https://www.laws-lois.justice.gc.ca/eng/ regulations/SOR-2002-229/index.html